பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 23 சித்திரை 3 ஜ. ஆசிர் 9 இதழ் 64

யாழ்ப்பாணம் புதன்கிழமை 15 - 4 - 1981

# கிளிநொச்சி எம். பி.

# பதவி துறக்க விருப்பம்!

## மா. அ. சபைக்கு நிறுத்த கட்சிமேலிடம் யோசனை?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி தமது பதவியை ராஜினாமா செய்ய விருப்பம் தெரிவித்து கட்சியின் மேலிடத்துக்கு அறிவித்திருப்பதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு கட்சியின் வளர்ச்சிக்கும் இயக்கத்தின் இலட்சியத்துக்குமாக தீவிரப்பணியில் ஈடுபட விரும்புவதாக திரு. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார் என்று தெரிகின்றது.

திரு. ஆனந்தசங்கரி பதவியிலிருந்து விலகுவதைக் கட்சி மேலிடம் சற்றும் விரும்பவில்லை என்று தெரிகின்றது. எனினும் அவர் வற்புறுத்தும் பட்சத்தில் மாவட்ட அபிவிருத்தி சபையொன்றில் அவரைப் பதவியில் அமர்த்துவதற்கு விரும்புவதாகத் தெரிகின்றது. அனேகமாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு. ஆனந்தசங்கரியைத் தலைவர் பதவிக்கு நிறுத்த கட்சி மேலிடம் ஆலோசிப்பதாகத் தெரிகின்றது.

கிளிநொச்சித் தொகுதியில் திரு ஆனந்தசங்கரியின் இடத்துக்கு யாரை நியமிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி மேலிடம் இன்னமும் முடிவு எதுவும் செய்யவில்லை. ஆனால் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

கட்சியின் ஒற்றுமையைப் பேணவும் வடக்கு-கிழக்குப் பிரதேச மக்களின் ஒருமைப்பாட்டை வளர்க்கவும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர் காசிஆனந்தனை கிளிநொச்சிப்பகுதிக்கு நியமிக்கப்படுவதையே திரு. ஆனந்தசங்கரி விரும்புவதாகத் தெரிகின்றது.

## தேர்தல் ஆணையாளருக்கு கூட்டணி செயலாளர் பதில்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் எம். பி. சி. கதிரவேலுப்பிள்ளையின் மரணத்தையடுத்து காலியாகவுள்ள கோப்பாய் தொகுதி ஆசனத்தை புதிய எம். பி. மூலம் நிரப்புவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் எழுதிய கடிதத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பதில் அனுப்பியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சரியானபாதையில் அரசு செல்கிறதா? மக்கள் ஜூன் 4-ல் தீர்மானிப்பர் ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

இந்த அரசு சரியான வழியில் செல்கிறதா என்பதை பொதுமக்கள் ஜூன் மாதம் 4-ம் திகதி தீர்மானிப்பார்கள்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று நியத்தலாவையில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

"காணிச் சீர்திருத்தச் சட்டத்திற்கமைய அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட தோட்டங்கள் ஒருபோதும் அவற்றின் முன்னைய சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படமாட்டாது" என்று திரு. ஜெயவர்த்தன உறுதியளித்தார்.

இந்தத் தோட்டங்களை வருவாய் தரும் தோட்டங்களாக நடத்துவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தோட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் பிராந்தியக் கூட்டுத்தாபனங்களை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இத்தோட்டங்களின் உரிமையை தொழிலாளருடனும் பொதுமக்களுடனும் பகிர்ந்து கொள்ளுதல் நல்லது என்றும் அவர் குறிப்பிட்டார். நிர்வாகத்துறையில் தலைசிறந்து விளங்கும் நிறுவனங்களிடம் தோட்டங்களின் நிர்வாகத்தை ஒப்படைப்பது பற்றியும் யோசனைதெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி நாட்டிலுள்ள அரச புடவை ஆலைகள் இப்படி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டதால் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

## நீர்வேலி இரட்டைக் கொலை: பூர்வாங்க விசாரணை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் கடந்த மாதம் 25-ம் திகதி இடம்பெற்ற 81 லட்ச ரூபா வங்கிக் கொள்ளையின் போது நிகழ்ந்த இரட்டைக் கொலை தொடர்பான பூர்வாங்க விசாரணை, இன்று யாழ் நீதவான் திரு ரி ஜோகநாதன் முன்னிலையில் ஆரம்பமாகும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும்; விசாரணை ஒத்திவைக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

## 'கொலம்பியா' திட்டத்தில் இராணுவ நோக்கமும் உண்டு

### சோவியத் செய்தி

கென்னடிமுனை, ஏப் 15

கொலம்பியா என்ற விண்வெளிக்கலம் கடந்த நள்ளிரவு கலிபோர்னியாவில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வந்திறங்குமென அறிவிக்கப்பட்டிருந்த அதே வேளையில் அமெரிக்காவின் இந்தமுயற்சியில் ராணுவ நோக்கமும் இருக்கின்றது என சோவியத் செய்திஸ்தாபனம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இக்கலம் விண்வெளியில் செலுத்தப்படுவதற்கான திட்டத்தில் 'பெண்டகன்' அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று டாஸ் கூறியுள்ளது.

கொலம்பியா கலம் வந்திறங்கும் காட்சியைக் காண்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் குறித்த இடத்தில் கூடியிருந்தார்கள். ஆபத்து ஏதும் நிக

(8ம் பக்கம் பார்க்க)

## தந்தையும் மகளும் இம்சிக்கப்பட்டனராம்

(யாழ்ப்பாணம்)

சிவில் உடையில் வந்த இலர் விசாரணை செய்யப்போவதாகக் கூறி தன்னையும் தனது மகளையும் இம்சித்ததாக, கந்தர்மடத்தைச்சேர்ந்த ஓய்வுபெற்ற அரசஊழியர் ஒருவர் யாழ்ப்பாணம் எம் பியிடம் முறைபாடு செய்ததைத் தொடர்ந்து, இது சம்பந்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரனிடம் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் புகார் செய்துள்ளார்.

வீட்டில் தானும் மகளும் இருந்தபோது, திடீரென வந்த இவர்கள் குறிப்பிட்ட இரு வாலிபர்கள் தொடர்பாக விசாரணை செய்து, பின்னர், தன்னையும் மகளையும் இம்சித்ததாகவும் இருவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர் யாழ். எம். பி. யிடம் புகார் செய்துள்ளார்.

ஹோம் பினன்ஸ் லிமிட்.,

82, கன்னதிட்டி, (போன் : 8310) யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக் கூடுதலான

25% வட்டியை

வழங்குகிறது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும். உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.

* உஷ்ண காலத்துக்கு உகந்த முதல்தரமான USHA Ceiling Fan (உஷா மின் விசிறி)

* உயர்தரமான "AIWA" கசற் றேடியோ

தலைமையகம்:

463, காலி வீதி, கொழும்பு - 3, தொலைபேசி: 89190

"காங்கேசன் ரவல்ஸ்"

தனியார் பஸ் சேவைகளும் டீசல் வாகனம் பழுதுபார்க்கும்

கராஜும்

குதூகலத் திறப்பு விழா

காலம்: 15 - 4 - 81 நேரம்: பி. ப. 4-00மணி

இடம்: 122. பிரதான வீதி, காங்கேசன்துறை

எதிர்க்கட்சி முதல்வர்

மாண்புமிகு திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு

காங்கேசன்துறை--

மட்டக்களப்பு

பஸ் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

உங்கள் நல்வரவை எதிர்பார்க்கின்றோம்.

காங்கேசன் ரவல்ஸ்

# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

சோண்டாவில் இருபாலை ரோட்டில் யாழ்ப்பாண கூட்டுறவு மின்தறி நெசவாலைக்கு அண்மையில் உள்ள 60 பரப்பு தோட்டக்காணியில் 15 பரப்பு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த ச. சிவசுப்பிரமணியத்துடன் தொடர்புகொள்ளவும். 8874

புதிய 'பிறிஸ்டேன்' டிராக்டர் டயர் ஒன்று (11x28) உள்ளது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 'ஜெயா' அச்சகம், அளவெட்டி வடக்கு 8873

29 சிறி FORD மினி பஸ் பிரயாண வண்டி விற்பனைக்குண்டு. விற்பனைச் சாமான்களும் ஏற்றலாம். தொடர்பு; 24, 2-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 8031 (8863)

## தேவை

25 வயதிற்குட்பட்ட ஆண்கள் கடைவேலைக்குத் தேவை. விளம்பர இல. 8870, மே/பா. சுழநாடு, யாழ்ப்பாணம். 8870


## இத்தாலிக்கும் விசா

(கொழும்பு)

இத்தாலிக்கு உல்லாசப் பயணிகளாகச் செல்ல விரும்பும் இலங்கைப் பிரஜைகளும் இனிமேல் இங்கிருந்து விசா பெற்றுச்செல்ல வேண்டும் என்று இலங்கையின் இத்தாலியத் தூதரகம் அறிவித்திருக்கிறது.

இந்த நடைமுறை மே மாதம்முதலாம்திகதியிலிருந்து அமுல் படுத்தப் படவிருக்கிறது. (து)

3000 ஏக்கருக்கு

## பாசனவசதி விரைவில் கிடைக்கும்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த வெலிமருதமடு குடியேற்றத்திட்டக் குளத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இவ்வேலைகளை மூதூர் எம் பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம் ஈ. எச் மஹ்றூப் மாவட்ட அமைச்சின் பிரதியேகச் செயலாளர் ஜனாப் கே. எம் ஏ. அக்பர், மாவட்ட விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் ஜனாப் எம். சி எம். முஸ்தபா ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இவ்வேலைகள் முடிவடைந்ததும் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் தரிசுநிலங்கள் விவசாயநிலங்களாக மாறிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## வாடிக்கையாளர்க்கு கைவிசேஷம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நவீனசந்தையிலுள்ள மக்கள்வங்கி கிளையில் நேற்றுக் காலை 9 மணிக்கு முகாமையாளர் திரு எஸ். ஜே டி. செல்லையா வாடிக்கையாளர்களுக்கு கைவிஷேசம் வழங்கினார்.

இவ் வைபவத்தில் ஏராளமான வாடிக்கையாளர்கள் பங்குபற்றியதுடன் பல புதிய கணக்குகளும் பொதுமக்களினால் திறந்துவைக்கப்பட்டது வங்கியில் வழமைபோல் சகல வேலைகளும் நடைபெற்றது (இ-து)

## மாதாந்தக் கருத்தரங்கு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்களுக்கான கூட்டுறவுக் கல்விக்கருத்தரங்கு பிரதிமாதமும் நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மன்னார் கிளையும், மாவட்டக் கூட்டுறவுக்காரியாலயமும் ஒன்றிணைந்து மேற்கொண்டுவருகின்றன. (அ)

# மாவட்டசபைத் தேர்தலில் சோஷலிஸமுன்னணிபோட்டி


## 17-ம் திகதி வேட்பாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மூன்னாள் தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. செ குமாரசூரியர் தலைமையிலான சோஷலிச முன்னணி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதென்று தீர்மானித்துள்ளது

யாழ் மாவட்டத்தில் மட்டுமே போட்டியிடுவதென்றும் இம் மாதம் 17ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் வேட்பாளர் தெரிவு இடம்பெறும் என்றும் கட்சியின் இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. ரி. இளங்கோ தெரிவித்தார்

இதேசமயம் மாவட்ட சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கட்சியின் ஒரு சாராரும் போட்டியிட வேண்டுமென்றுமற்றும்சிலரும் கோரிவருவதாகத்தெரிகிறது. (இ)



நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விநாயகர் சிலை பிரதிஷ்டா வைபவதின்போது சிலைகளை அன்பளிப்புச் செய்த மில்க்வைற் அதிபர் 'விநாயகர் தோத்திரம்' என்ற நூலையும் வெளியிட்டுவைத்தார். அதன் முதற்பிரதியை கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் கையேற்றார்.

## 'அனைத்து நாடுகளிலுமுள்ள சைவமக்களுக்கு பேரிழப்பு"

### பரமாசாரிய சுவாமிகள் மறைவுக்கு நாவலப்பிட்டி மேயர் அனுதாபம்

(நாவலப்பிட்டி)

'சுவாமிகளின் மறைவு இலங்கைக்குமட்டுமல்ல கடல்கடந்த நாடுகளிலுள்ள சைவமக்களுக்கும் பேரிழப்பு.'

இவ்வாறு நாவலப்பிட்டிநகர சபைமுதல்வர் ஜனாப் எஸ். வை. மூகம்மது நல்லைஞானசம்பந்தர் ஆதீன முதல்வா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளின் மறைவு குறித்து அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா விடுத்துள்ள செய்தியில், சின்னத்தம்பிப் புலவரையும், ஆறுமுகநாவலரையும் பிறப்பிடமாகக்கொண்டதால் பெருமைபெற்ற நல்லைப்பதி பிற்காலத்தில் நல்லை ஆதீனம் அமையப்பெற்று பரமாச்சார்ய சுவாமிகளுடைய தொண்டினாலே மேலும் பெருமைபெற்று விளங்கியது' என்று குறிப்பிட்டுள்ளார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது;

'சில வருடங்களுக்குமுன்னர் சென்னையில் சுவாமிகள் நடாத்திய நிகழ்ச்சி ஒன்றில் பார்வையாளர்களாகச் சென்றிருந்தேன் ஒரு மூலையில் இருந்த என்னை அவதானித்த சுவாமிகள் மேடைக்கு அழைத்துச் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் மத்தியில் இலங்கையின் அரசியல் நிலைபற்றி விளக்கிக் கூறினார். சுவாமிகள் துறவியாக இருந்தாலும் ஈழமக்களுடைய அரசியலில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.'

கல்லூரி மாணவனாக இருந்த காலம் தொடக்கம் மணிஐயர் என்று அழைக்கப்பட்டுவந்த சுவாமிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது

சுவாமிகளுடைய மறைவு தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதற்கும் பேரிழப்பாகும்., (சி-கு)

## "இறைபணி செய்தால் உயர்வடையலாம்"

(திருகோணமலை)

"உலகில் மனிதப்பிறவியெடுத்தவர்கள் அனைவரும், இறைபணிசெய்து வாழ்ந்தால் நிச்சயம் உய்வடையலாம் என்பதைப் பணிசெய்து, அருள்பெற்று, வாழ்ந்துகாட்டியுள்ளார் அப்பர் சுவாமிகள் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனத் தாம் அருளிய திருமறையின்கண்ணே அப்பர்சுவாமிகள் அருளியுள்ளார். மனிதப்பிறவி பெறற்கரியதொரு பிறவியாகும். அதனைப்பெற்றதன் பயனை நாம் அடையவேண்டுமானால், பணிசெய்து வாழுதல் வேண்டும்"

இவ்வாறு சைவப்புலவர், திரு. இராசையா ஸ்ரீதரன், திருக்கோணேஸ்வரம் தேவஸ்தானப் பூங்காவன விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்,

திருமலை இந்து இளைஞர் பேரவையினரால், கொண்டாடப்பட்ட இப்பெரு விழாவில் பண்ணிசைச் செல்வன் திரு. இரா. திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி, செல்வி. புஷ்பமலர் மூத்துக்குமாருவின் இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெற்றன.

இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த, திரு. செ சிவபாதசுந்தரம் நன்றிகூறினார். பகல் விசேஷ அன்னதானமும் இடம்பெற்றது. (ஈ)

## வல்வை நகரசபை அனுதாபம்

(உடுப்பிட்டி)

வல்வை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளையின் மறைவுக்கு இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வை நகரசபைத் தலைவர் திரு எஸ் ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளையின் குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்தி அனுப்புவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ)

## பஸ்-வான் விபத்து: ஒருவர் பலி; 21 பேர் காயம்

(ஜா எல)

கொழும்பு - நீர்கொழும்பு பாதையில், ஜாஎல பாலத்தின் அருகே நிகழ்ந்த பஸ்--வான் விபத்தில் வான்சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்! பஸ்சாரதி கடுமையான காயங்களுக்குள்ளாகி ருகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரண்டு வாகனங்களிலும் பிரயாணம் செய்த 20 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இரண்டு வாகனங்களும் சேதமடைந்துள்ளன. (து)

6 பிள்ளைகளின் தந்தை

## விவசாயம் பாதித்ததால் தற்கொலை!

(மன்னார்)

விவசாயம் பாதிப்படைந்ததால் 6 பிள்ளைகளின் தந்தை கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்டார். முருங்கன் பிடாரிகுளம் பகுதியைச் சேர்ந்த கோவிந்தன் இராசலிங்கம் (வயது 34) என்பவரே இப்படி மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக நடைபெற்ற மரண விசாரணையின்போது இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் இவ்வருடம் காலபோக விவசாயம் பாதிப்படைந்துவிட்டதனால் தமது கணவர் கவலையோடு காணப்பட்டதாகவும் சம்பவதினம் சுமார் ஏழரை மணியளவில் தாங்கள் எல்லோரும் இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டு தாம் தமது மூத்தமகனுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தபோது வெளியே சென்றிருந்த எனது கணவர் வீட்டிற்கு திரும்பிவந்து தாம் மருந்துகுடித்துவிட்டதாகச் சொன்னதாகவும் உடனடியாக அவரை முருங்கன் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் அங்கு அவர் மரணமானதாகவும் சொன்னார்.

மரணவிசாரணை நடத்திய ஜனாப் என். எம். கப்புமுகமது தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

## அமரர் 'கதிர்' அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்

காலஞ்சென்ற கோப்பாய் எம். பி.யும் அறவழிப்போராட்டக் குழுவின் காப்பாளருமான இ. கதிரவேலுப்பிள்ளைக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இம் மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

அறவழிப்போராட்டக் குழுவினர் ஒழுங்குசெய்துள்ள இக் கூட்டத்திற்கு அறவழிப் போராட்டக்குழு உறுப்பினர் திரு. வி. சு. துரைராசா தலைமை வகிப்பார்.

இக் கூட்டத்தில்எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், ஊர்காவற்றுறைஎம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், முன்னாள் விரிவுரையாளரும் நேசையாசட்டத்தரணி திரு. செ. சந்திரகாசன் உட்படபலர் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். (சி-கு)

## ஆரம்ப நிதியாக ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட வரட்சி நிவாரண வேலைகளுக்கென சமூக சேவைகள் அமைச்சு ஆரம்ப நிதியாக 2 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

இதனையடுத்து மன்னார் மாவட்டத்தில் காலபோக விவசாயம் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வரட்சி வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

மன்னார், மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே காலபோக விவசாயம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இப்பகுதி விவசாயிகளுக்கு வரட்சி நிவாரண வேலைகள் உடனடியாக வழங்கப்படவுள்ளன. மன்னார் கச்சேரி தலைமை நிலைய உதவி அரசாங்க அதிபர் திரு. எம். ஆறுமுகம் இதனைத் தெரிவித்தார். (அ)

## மருந்தென நினைத்து நஞ்சருந்தினார்

(மன்னார்)

கிருமிநாசினி அருந்தியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்களின் பின் மரணமானார்.

அடம்பன் வட்டக்கண்டல் பகுதியைச் சேர்ந்த அப்துல் காதர் அப்துல்லா (வயது 55) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இவர்வயிற்றுவலி மருந்தென்று கிருமிநாசினியை அருந்தினராம்.

இவரது மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப் எம் பி எ. ஜப்பார் தற்செயல் சம்பத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (அ)

### நாட்டுக்கு வெளியே இருக்கும்

# பூட்டோவின் மகனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பாக். அரசு உத்தரவு

## அரசுக்கு எதிராகப் போர்தொடுக்க முயன்றாராம்

### சகாக்களுடன் ஆஜராகாவிடினும் விசாரணை நடக்கும்

கராச்சி, ஏப். 14

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் மகன் முதர்ஸா பூட்டோவை பாகிஸ்தான் நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு பாகிஸ்தான் இராணுவ அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்போது வெளிநாட்டில் தங்கியிருக்கும் முதர்ஸா பூட்டோ பாகிஸ்தான் அரசுக்கு எதிராக யுத்தம் தொடுக்கவும் சூழ்ச்சி செய்யவும் முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பாகிஸ்தான் விமானத்தைக் கடத்தியதற்கு தாமே முழுப் பொறுப்பு என ஜனாப் முதர்ஸா அறிவித்திருந்ததை அடுத்தே அவர் மீது இப்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முதர்ஸாவும் அவரது சகாக்கள் 11 பேரும் இம்மாதம் 27ம் திகதிக்குமுன் பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்றில் ஆஜராகாவிடின் அவர்கள் இல்லாமலேயே விசாரணை நடைபெற்று 14 ஆண்டு கடுமியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவர்களது உடைமைகளும் பறிமுதல் செய்யப்படுமென்று பெஷாவரில் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

---

## சீனாவில் பணவீக்கம் அதிகரிப்பு

லண்டன், ஏப் 14

பீகிங் தலைமையில் அரசியல் பொருளாதாரக் கொள்கை மீது சீன மக்களின் அதிருப்தி அதிகரித்து வருகின்றது என்று 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகையின் பீகிங் நிருபர் எழுதியுள்ளார்.

சீன மாகாணங்களிலும், நகரங்களிலும் ராணுவச் சட்டத்தை அமுல் நடத்துமாறு தெங்-சியோ-பிங் உத்தரவிட்டுள்ளார். அவரது உத்தரவுப்படி ஸ்தல அதிகாரிகள் ஒடுக்கு முறைகளைக் கையாளலாம். ...க்களுக்கு எதிராக ராணுவப்படைகளைப் பயன்படுத்தலாம்.

சமுதாய, அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளின் நேரிடை விளைவாக சீனாவில் பல பாகங்களில் கிளர்ச்சி வடிவத்தில் எதிர்ப்புணர்வை மக்கள் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டமும் பணவீக்கமும் சீனாவில் அதிகரித்துள்ளது என்றும் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகையின் பீகிங் நிருபர் எழுதியுள்ளார்.

---

## சூறாவளிக்கு 65 பேர் பலி!

டாக்கா, ஏப் 14

பங்களாதேஷில் ஏற்பட்ட சூறாவளியினால் இறந்தோர் தொகை 65 ஆக அதிகரித்துள்ளதாகவும் 2 ஆயிரத்திற்கு அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

டாக்காவிலிருந்து 120 மைல் தொலைவில் 150 மைல் வேகத்தில் வீசிய இச்சூறாவளியினால் ஆயிரக்கணக்கானோர் வீடிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ)

---

## தாயுடன் 2 பிள்ளைகள் ஆற்றுக்குப்பலி!

சென்னை, ஏப். 14

ரேற்றுபாளையத்தில் பவானி நதி திடீரெனப் பெருகியதை அடுத்து 25 வயது இளம்பெண்ணும் அவரது இரண்டு (ஆண், பெண்) குழந்தைகளும் ஆற்றுக்குப் பலியானார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

### உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து

## கூட்டணி அபேட்சகராக முன்னாள் ப. ச. உறுப்பினர் பெயர் சிபார்சு

(உடுப்பிட்டி)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சமாதான நீதவானும், நெல்லியடிப் பட்டினசபையின் முன்னாள் உறுப்பினருமான திரு. என் பாஸ்கரனின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உடுப்பிட்டித் தொகுதி மத்திய கமிட்டிக் கூட்டத்தில் திரு. பாஸ்கரனின் பெயரைச் சிபார்சு செய்வதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் வல்வெட்டித்துறையில் தீக்கிரைக்குள்ளான மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் ஜீப் வண்டியைத் திருத்தியமைப்பதற்கு நிதி திரட்டிக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

---

## தென் லண்டனில் 3-வது தடவையாக கலவரம்

லண்டன், ஏப் 14

தெற்குலண்டன் பிரிக்ஸ்டன் மாவட்டத்தில், மூன்றாவது தடவையாக கடந்த இரவுக் கலவரங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பகுதியில் இடம்பெற்ற கலவரங்கள் குறித்து உத்தியோகபூர்வ விசாரணை நடைபெறுமென்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்திற்குள் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரவு கறுப்பு இளைஞர்கள் சிறுசிறு குழுக்களாகச் சென்று வீடுகளையும் கடைகளையும் சேதப்படுத்தியதுடன் கார் ஒன்றையும் தீயிட்டனராம்.

கடந்தவார இறுதிக்கலவரங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு சிரேஷ்ட நீதிபதி ஒருவருக்குத் தாம் பணித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு வில்லியம் வைட்லோ பாராளுமன்றத்தில் அறிவித்தசிலமணி நேரத்தின் பின்னரே இக்கலவரம் மூண்டதாகவும் இக்கலவரத்தின்போது பாரதூரமான தெதுவும் நடக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

### ஆந்திரா பஸ் விபத்து

# திருப்பதிக்குச்சென்றவர்களே விபத்தில் கருகி மாண்டனர்!

புதுடில்லி, ஏப். 14

ஆந்திரப் பிரதேசத்தில்விபத்துக்குள்ளான பஸ்ஸில் 80 பேர் திருப்பதிக்குச்சென்றுகொண்டிருந்தார்களென்றும் அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் சென்றமையினால் பஸ்ஸின் இல்லு அச்சு உடைந்து 6மீட்டர் மலையடிவாரத்தில் வீழ்ந்து தீப்பற்றி எரிந்தது என்றும், விபத்தில் இறந்த 46 பேரின் சடலங்களும் கருகிய நிலையில் மீட்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

கூலிகள் இறக்கும் தொழிலாளிகளும் ஹரிஜனர்களுமே இந்த பஸ்ஸில் பயணம் செய்தனர் என்றும் இறந்தவர்களில் 6 பேர் குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

## "ஆப்கான் அரசுக்கு பாலஸ்தீன ஆதரவுண்டு"

காபூல், ஏப். 14

"ஆப்கானிஸ்தான் 1978 ஏப்ரல் புரட்சியின் ஆதாயங்களை பாதுகாக்க நடத்தும் சகல போராட்டங்களையும் அரபு, பலஸ்தீன மக்கள் ஆதரிக்கின்றனர் என்று பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்து மத்திய கமிட்டி உறுப்பினர் திரு. கய்யிர் குப்பா தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன தூதுகோஷ்டியொன்றுக்கு தலைமைவகித்து காபூலுக்கு விஜயம்செய்திருக்கும் அவர்; ஆப்கான் மக்களின் புரட்சியை முறியடித்து நாட்டைப் பிளவுபடுத்த எடுக்கும் பிரயத்தனங்களை நாம் எதிர்க்கின்றோம்" என்று திருகுப்பா பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறினார்.

காபூல் அரசு முன்வைத்துள்ள சமாதானத்திட்டங்களை அவர் வெகுவாக பாராட்டினார். பேச்சுவார்த்தைகள் நடத்த பாகிஸ்தானும் ஈரானும் இணங்கவேண்டும் என்றும் தூதுகோஷ்டித் தலைவர் கய்யிர் குப்பா கருத்துவெளியிட்டார்.

---

## இயக்கச்சி ஆதவன் வி. க. வென்றது

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி கிராம முன்னேற்றச்சங்க ஆதரவில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

---

## கிளிநொச்சியில் பயிற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப்பகுதிபாடசாலைகளின் சாரணர் தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு, கிளிநொச்சி கனிஷ்டமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இருபத்திரண்டு ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாகக் கலந்து பயிற்சிபெற்றனர். (மண். நி. கு)

---

## வைத்தீஸ்வரச சநி ஆண்டுவிழா

(அரியாலை)

உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வர சன சமூக நிலையத்தின் 26 வது ஆண்டுவிழாவும், 23வது வருடாந்த உடற்பயிற்சி இறுதிநாள் போட்டிகளும் இம் மாதம் 17ம் திகதி மாலை நிலையத்தலைவர் திரு. க. தர்மலிங்கம் தலைமையில்நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவுக்கு பிரதம அதிதிகளாக யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ யோகேஸ்வரனும், யாழ் மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராசா விசுவநாதனும் கோப்பாய் அரசாங்க அதிபர் திரு கு. கிட்ணரும் கலந்து கொள்வார்கள்.

பரிசளிப்பு விழா வைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்களான தியு யே ஏ செல்நாயகம், திரு. யேசுதாஸ் சௌந்தரம், ஜனாப் பாஷா முஹிதீன பிச்சை, உதவி முதல்வர் திரு. பி சேவியர் உட்பட பலர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் (ஈ)

---

## சுதேசிய திருநாள் கொண்டாட்டம்

(அரியாலை)

அரியாலை 62 வது சுதேசிய திருநாட் கொட்டாட்டம் சென்ற 11ம் திகதி தொடக்கம் 3 நாட்களாக நடைபெற்றபோது சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி ஆகியன இடம்பெற்றன.

அரியாலை திறந்த வெளியரங்கில் நாடகப்போட்டியும் நடைபெற்றது கலை நிகழ்ச்சிகளும் இறுதிநாள் இடம்பெற்றன.

---

## கல்கி அவதாரக் கோபுரம்

(மல்லாகம்)

மல்லாகம் சிவலிங்கப் பிள்ளையார் சிவஞான வைரவர் ஆலயத் திருப்பணிச்சபையினர் கல்கி அவதார கோபுரம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். முதற்கட்ட வேலையாக அண்மையில் ஆலய நிர்வாகசபையினரால் கோபுரத்துக்கான அடிக்கல்நாட்டப்பட்டுள்ளது. (சி ஈ)

---

# தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றினால் அரசு ஸ்திரமடையும்

### போலந்து தொழிற்சங்கத்தலைவர் கூறுகிறார்

வார்சோ, ஏப் 14

"போலந்து அரசு பலமுக்கிய சீர்திருத்தங்களைமேற் கொண்டு பிரச்னைகளைத் தீர்த்து அரசின் மீது மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையைப் போக்கவேண்டும்".

இவ்வாறு போலந்துசுதந்திர தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் திரு. லேக் வலேசா தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

போலந்து அரசியல் நெருக்கடி குறித்து திரு. வலேசா கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

"எமது தொழிற்சங்கம் போராட்டம் மூலம் பலவற்றைச் சாதித்துவிட்டது. 2 மாதங்களுக்கு அரசு வேலைநிறுத்தத்தைத் தடைசெய்துள்ளமை வேறு விடயம். ஆனால் எமது தொழிற்சங்கம் அமைதியையே விரும்புகிறது. அதே சமயம் ஸ்திரமான அரசு நாட்டுக்கு அவசியமென்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலமே ஓர் அரசைப் பலப்படுத்தமுடியும்.

எமது சம்மேளனத்துடன் அரசு 600 ஒப்பந்தங்களைச்செய்துள்ளது. இது எம்மைப் பொறுத்தளவில் போதுமானவை". (இ)

---

## ஆசீர்வாதம் ஹென்றி ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு ஆசீர்வாதம் ஹென்றி ஜே பி. மாரடைப்பு காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் இருபதாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை குருநகர் கலையரங்கத்தில் திருமறைகலாமன்றத்தின் "பலிக்களம்" என்னும் திருப்பாடுகளின் காட்சி நடைபெறும். (து)

**மணிவாக்கு**

வயதை முன்னிட்டுப் பெரியவர் ஆவது சிறந்தது. மனப்பான்மையை முன்னிட்டு பெரியவா ஆவது அதிலும் சிறந்தது

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## புதிய சகாப்தம்

புதுவருடத்தில் மக்களுக்கு ஒன்றை முன்வைத்து நம்பிக்கை ஒளி ஊட்டுவதற்கு மாவட்ட அபிவிருத்தி சபைகள் நல்ல வாய்ப்பளிக்கின்றன.

அரசாங்க அதிபர்கள்மா நாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

அரசியல்வாதிகள் மட்டுமல்ல, பொதுவாக கீழைத்தேய மக்கள் எதனையும் மிகைபடுத்திச் சொல்வதில் இன்பங்காண்பவர்; இந்தப் போக்கு அமெரிக்கர்களுக்கும் உண்டு.

ஆங்கிலேயர் எந்த உண்மையையும் குறைத்து மட்டுப்படுத்தும் பண்புடையவர்கள். அமெரிக்கர்களும் நாங்களும் 'அற்புதமானது அது' என்றால் ஆங்கிலேயர் "பிழையில்லை' என்பார்கள். ஜனாதிபதி அவர்களே புதிய அரசியல் சகாப்தம் உருவாகப்போகிறதென்கிறார். ஆங்கிலேய பாணியில் 'பிழை போகாது இருந்து பார்ப்போம்' என்பார்கள்.

அபிவிருத்தி சபைகள் பற்றி அரசுக்கு ஒரு வெற்றி என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். பகிஷ்காரம் பற்றிப் பலர் பேசினர். உருவெடுத்தனர். ஈற்றில் அது கைவிடப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் காரசாரமாக எதிர்ப்புத் தெரிவித்தபோதும், ஒருவாக்கால் அது தோல்வியுற்றது. தமிழர் கூட்டணியிலும், ஒருபகுதியினர் இத்திட்டத்தைப் பலமாக எதிர்த்துவந்தனர்; ஆனால் கட்சி, ஆரம்பத்திலிருந்தே ஆதரித்து வந்தது.

எதிர்ப்பின் இரகசியம் சிரிப்புக்குரியது; இவ்வித சபைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிக உரிமைகளை வழங்க உதவுமென்ற அச்சம் தெற்கிலிருந்து வந்தது. ஆனால் இங்கு இவ்வித சபைகளால் ஒரு நன்மையும் கிடையாதென்ற முணுமுணுப்பு.

அது எவ்வாறாயினும் வரும் ஜூலைமாதம் அபிவிருத்திச்சபைகள், மினி பாராளுமன்றங்கள் ஆட்சி புரிய ஆரம்பமாகின்றன. நிறைவேற்றும் அதிகாரங்களின் சபைகளாயிருந்த போதும், திட்டம் வகுக்கும் அதிகாரம் முக்கியமானது; அதைவிட எந்தச்சபைக்கும் தேர்தல் என்றால் இந்நாட்டு மக்கள் சும்மாவிருக்கப் போவதில்லை பாராளுமன்றம் தொடக்கம், கிராமசபை வரைக்கும், அங்கத்தவர்களின் அந்தஸ்தைக் கொடிகட்டிப் பறக்கவைக்க நாம் பயிற்சி பெற்றிருக்கின்றோம்.

ஜனாதிபதியின் விளக்கவுரையைப் படித்தால் கச்சேரி நிர்வாகம் கைவிடப்படுவதும், மக்கள் பிரதிநிதிகளுக்குப் பரவலான ஆட்சி முறை வழங்கப்படுவதும் தெளிவாகிறது.

எந்தப் புரட்சிகரமான மாற்றத்திலும், நேர்மையான அதிகாரிகளே ஊழலை, லஞ்சத்தை ஒழிக்க முடியுமென்பது 'புதியசகாப்தத்தின்' கேள்விக்குறியாகின்றது.

## வரலாற்றின் விபரீதம்

இந்தியா, இலங்கை போன்ற பல ஆசிய ஆபிரிக்க நாடுகளை பலலாண்டுகளாக ஆட்சிபுரிந்த ஆங்கிலேயரின் இன்றைய கதி என்ன?

வெள்ளைத் தோலுக்கு அசமிருந்தகாலம் நீங்கி, தங்கள் சொந்த நாட்டிலே, (ஷேக்ஸ்பியர் அதனை உலகின் அசைக்கேலாத கடற்கோட்டை என்கிறார். கறுப்பு இனத்தவர்களுடன் போர் புரிகின்றனர்.

'பிரிக்ஸ்டன்' என்ற மாவட்டத்தில் இனக்கலவரம் மோசமானநிலையடைந்திருக்கிறது எங்களை ஆண்ட நாட்டினர், தங்கள் சொந்த நாட்டில் இனப்பாகுபாடின்றி பிரஜாவுரிமை, கல்வியுரிமை, தொழிலுரிமை எங்களுக்கு வழங்க முன்வந்த பெருந்தன்மையினர்.

இந்தப் போக்கைக் கண்டிக்கும் இயக்கம்பலமடைய, அதற்கு ஆதரவளிக்கும் இன்றைய பிரதமர் மார்கரெட் தட்சரின் நிர்வாகம் இவ்வித குழப்பங்களுக்கு துணைக் காரணமெனலாம்.

பிரிட்டிஷ் நீதி என்றுமே மாசுபடாதகங்கைநீர். ஆட்சியின் குறை எதுவும் நீதிமுறைக்குக் கட்டுப்படுமென்பது பொதுமக்களின்- சிறப்பாக ஆசிய மக்களின் நம்பிக்கை.

இன்று இந்தியாவுக்குவருகின்றார் பிரிட்டிஷ் பிரதமர் -இரும்புப்பெண்மணி- மார்கரெட் தட்சர் உலகின் மிக்க செல்வாக்குடைய பெண்மணியாக விளங்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடன் நடத்தும் பேச்சுவார்த்தை ஆங்கிலப் பிரதமருக்கு சமநிலை போக்கை விருத்தி செய்ய உதவுமென நம்பலாம்.

வரலாற்றின் விபரீதம் என்னே!

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தொகுதி சோஷலிஸ முன்னணிப்பொதுக் கூட்டம். சிறிமுருகவேள் தலைமையில் வழக்கம்பரை அம்மன் வீதியில் இம்மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

திரு. செ. குமாரசூரியர், திரு. வே. தருமலிங்கம், திருமதி மகேஸ்வரி சிவஞானம் உட்படபலர் உரையாற்றுவர். (கு)

### கண்சிகிச்சைப் பிரிவு அமைக்கவும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கண் நோய் சிகிச்சை பெற அனுராதபுரம் அல்லது யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய கஷ்ட நிலையைத் தவிர்க்க மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை விரைவில் ஆரம்பிக்குமாறு மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்குழுத் தலைவர் ஜனாப். என். எஸ் எம் மௌது அரசைக் கோரியுள்ளசர். (அ)

பாராளுமன்றத்தில் — நமதுசபைநிருபர் 'மாலி'

# "எங்கள் அனைவரையும் அகற்றுவதுதான் திட்டமா?"

## ஆட்சியாளர் மீது மைத்திரி சீற்றம்

"உங்கள் தலைவியை அகற்றிவிட்டோம்; அடுத்து உங்களை அகற்றப்போகிறோம் என்ற குறிப்புத்தான் உங்கள் நடவடிக்கையில் தெரிகிறது" இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவரும் மதவாச்சி உறுப்பினருமான திரு. மைத்திரிபால சேனநாயக்க சபையில் அரசாங்கத்தரப்பினரைப் பார்த்துக்கூறினார்.

சட்டசபைக் காலந்தொட்டு இற்றைவரை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகவிருக்கும் ஒரேயொருவரான திரு. மைத்திரிபால 18 ஆண்டுகள் அமைச்சராகப்பணி புரிந்தவர். திருமதி சிறிமாவோவின் கடந்த அரசாங்கத்தில் நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பாராளுமன்றச் சபைமுதல்வராகவும் விளங்கியவர்.

திருமதி சிறிமாவோ தன்னுடைய கடந்த ஆட்சிக்காலத்தில் 1972 டிசம்பர் மாத இறுதியிலிருந்து 1977 பெப்ரவரி 16ந் தேதிவரை தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தை அப்படித் தொடர்வதற்கான தேவைகள் இல்லாதிருந்தபோதும் அதனை நீடிப்பதற்கு மகாதேசாதிபதிக்கும் பின்னர் ஜனாதிபதிக்கும் ஆலோசனை வழங்கி தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று இதுபற்றி விசாரித்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தீர்ப்பளித்ததும் அதற்கமைய பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலம் திருமதி சிறிமாவோவின் பாராளுமன்ற உறுப்புரிமையும் குடியியல் உரிமைகளும் 7 ஆண்டுகளுக்கு நீக்கப்பட்டிருக்கின்றன.

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கான ஆலோசனையை தாம் தனிப்பட்ட முறையில் அல்ல, அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புடனேயே வழங்கியதாகவும் எனவே தன்னை மாத்திரமன்றி தனது அமைச்சரவையின் ஒவ்வொருவரதும் குடியியல் உரிமைகளையும் அல்லவா நீக்கவேண்டும்? என்றும் திருமதி சிறிமாவோ ஆணைக்குழுமுன்னும் பின்னர் பொதுக்கூட்டங்களிலும் கூறியுள்ளார் அப்படி அவரது அமைச்சரவையில் இந்த ஆலோசனைக்கு பொறுப்பாக மேலும் அமைச்சர்கள் இருந்தார்களா? என்பதை கண்டறிவதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கும் பிரேரணையை பிரதமர் திரு ஆர் பிரேமதாசா கொண்டு வந்தபோதே சம்பந்தப்பட்ட திருமதி ஸ்ரீமாவோவின் அந்த அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான திரு. மைத்திரிபால இக்கூற்றை வெளியிட்டார். அரசாங்க தரப்பில் அவரது இக்கூற்றுக்கு அப்போது சிரிப்புத்தான் பதிலாகவிழுந்தது!

திருமதி ஸ்ரீமாவோவின் அவசரகால ஆட்சிபற்றியும் அப்போது நிகழ்ந்த சம்பவங்கள் பற்றியும் இந்தப் பாராளுமன்றத்தில் பிரச்னைகள் எழுவது புதிதானதல்ல. ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் இப்பிரேரணையைக் கொணர்ந்த சமயம் எழுந்த இப் பிரச்னைகளுக்கு ஒரு விசேடம் உண்டு.

திருமதி சிறிமாவோவின் பிரதிஅமைச்சராக— பாதுகாப்பு வெளிவிவகார பிரதி அமைச்சராக அவசரகாலச் சட்டத்தின் கீழான பொலிஸ் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்தார். என்று ஐ. தே. க. வினரால் பொதுவாக குற்றஞ்சாட்டப்படும் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியும் சபையில் அமர்ந்திருந்தார்.

திருமதி சிறிமாவோவின் அரசாங்கத்தில் கூட்டுச்சேர்ந்திருந்த இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான திரு. சரத் முத்தெட்டுவேகமவும் இருந்தார்.

— இவைதான் இம்முறை இப் பிரச்னைகளுக்கு ஒரு விசேடத்தை அளித்தன.

### "உண்மை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும்"

"உண்மை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை நடத்தவேண்டும்" என்று பிரதமர் திரு. பிரேமதாசா அத்தனகலை உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி மீது நேரடியாகவே கடுமையான வார்த்தைப்பிரயோகமும் செய்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்....

புத்தாண்டு பிறந்துவிட்டது!

வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்பதை உணர்த்துவதற்காக புத்தாண்டுத்தினத்தன்று சர்க்கரையுடன் வேப்பந்தளிரும் சேர்த்து இனிப்பும் கசப்புமாக உண்ணக் கொடுப்பதுண்டாம்

இம்முறை நமது நாட்டில் புத்தாண்டு தினத்தன்றும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அதாவது "உங்கள் வாழ்க்கை என்றும் ஒளிமயமாகவே இருக்க முடியாது; அது ஒளியும் இருளும் கலந்ததுதான்" என்ற தத்துவத்தை மின்வெட்டு உணர்த்தியது போலும்!

ஓர் அமைச்சரிடமிருந்த "ஒளி" புத்தாண்டு பிறக்கும் காலத்தில் கைவிட்டுப் போனதைவிட, புத்தாண்டுத்தினத்தில் சிறிது நேரம் "ஒளி" மறைந்தது பெரிய காரியமல்ல! மின்னொளி சற்றே மறைந்தபோதிலும் நிலவொளி "நானிருக்கப் பயமேன்?" என்று புத்தாண்டில் கைகொடுத்தது.

மின்சக்தி எரிபொருள் அமைச்சின் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்றிருக்கிறார்.

0 0 0

புத்தாண்டு தேர்தலோடு பிறந்திருக்கிறது.

மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கான தேர்தல் ஜூன் மாதம் நாலாந் தேதி நடைபெறவிருக்கிறது. தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகிவிட்டது.

"ஜூன் மாதம் நாலாந் தேதி நாங்கள் ஒரு குட்டிப் பொதுத் தேர்தல் வைக்கின்றோம். வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்துள்ள சமயத்தில் மக்கள் தீர்மானிப்பதற்கு விட்டிருக்கிறோம். 1983 ம் ஆண்டில் பொதுத் தேர்தலையும் 1984-ம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலையும் வைபபதற்கிருக்கிறோம். தங்களை யார் ஆளவேண்டுமென்பதை மக்களே தெரிவு செய்து கொள்ளலாம். பாராளுமன்றத்தின் ஆயுள்காலத்தை பாராளுமன்றம் பெரும்பான்மை மூலம் நீடிக்கமுடியாதென்பதை அரசியலமைப்பு ரீதியாக ஏற்படுத்தியிருக்கிறோம்" என்ற ஜனாதிபதி ஜே.ஆர் கூறியிருக்கிறார்.

ஜூன் மாதம் நாலாந் திகதி நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் தேர்தலை 'குட்டிப் பொதுத்தேர்தல்' என்று ஜனாதிபதி வர்ணித்திருக்கிறார்.

இத்தேர்தலின் முடிவுகள் எவையாயிருப்பினும் 1983-ம் ஆண்டுவரை நாம ஆட்சியிலிருப்போம் மீண்டும் நாம் மக்கள் முன் 1983 ல் செல்வோம். நாங்கள் மூன்று வருடங்கள் ஆட்சியிலிருந்து விட்டோம். உருவாக்கப்பட்டுள்ள பிரச்னைகளை நாம் காண்கிறோம்' என்று ஜனாதிபதி தெளிவாக்கியிருக்கிறார்.

எப்படியோ ஒரு தேர்தல் வருகிறது. பல்வேறு அரசியல் கட்சிகளும் பிரசாரத்தில் இறங்கப்போகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## கூட்டணியும் அபிவிருத்திச்சபை வேட்பாளரும்

அரசியல் கட்சிகளிடையே மீண்டுமொரு பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. மாவட்ட அபிவிருத்திச்சபை சட்ட மூலம் பாராளுமன்றத்திற்கு வந்தபோது அதனைக்கண்டித்த கட்சிகள் கூட தேர்தல் அறிவிப்பு வந்ததும் தமது பணியைத் தொடங்கி விட்டன.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப்பகுதிகளில் மட்டுமேபோட்டியிடவுள்ளது.

தமிழ் மாவட்டங்களில் மிகப்பெரிய மாவட்டமான யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான தேர்தலில் எப்படியேனும் சில ஸ்தானங்களையாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று ஆளும் கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும்

(5-ம் பக்கம் பார்க்க)

# அன்று நடந்தது இன்று நடப்பது

## மனிதனைத் தின்னும் பல்லிகள்

பாபா என்ற இடத்தில் மனிதரைத் தின்னும் பல்லிவகை கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான பல்லிகளின் நீளம் சுமார் ஒன்பது அடியாகும்.

மோரர்ஸ்டிக் என்ற இடத்திற்கருகில் இரு வேடர்கள் தமது நாயுடன் வேட்டையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இவ்வகைப் பல்லிகளில் ஒன்று அவர்களின் நாயைக் கவ்வி விழுங்க முயன்றது.

இதைக் கண்ட வேடர் பல்லியைத் தாக்கி இம்சைப்படுத்தவே நாயை விட்டுவிட்டு வேடரில் ஒருவரை கவ்வி ஓட முயன்றது எனினும் அப்பல்லி சுட்டுக் கொல்லப்பட்டது.

இவ்வகைப் பல்லிகள் பின்னங்கால் இரண்டாலும் ஓடியே தமது தாக்குதலைச் செய்வனவாகும்.

— வி. கே. நவசோதி

## இப்படியும் நடக்கிறது

இம் மாதம் இருபதாம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில்; யாழ். நகரிலுள்ள ஒரு பரீட்சை நிலையத்தின் பெயர் குழறுபடி பற்றி கடந்த வாரம் 'ஈழநாடு' இதழில் செய்தி வந்திருந்தது, நீங்கள் தெரிந்ததே. யாழ். இந்துபாலிக வித்தியாலய' என்ற பரீட்சை நிலையம் யாழ். நகரில் எங்கே இருக்கிறது என்று கேட்டு; இப்படியும் நடக்கிறது என்று செய்தி சுட்டிக்காட்டியிருந்தது! இப்பொழுது இதே பரீட்சையில் மற்றுமொரு குழறுபடி!

பரீட்சையின் நேர அட்டவணையில்: தமிழ் முதலாம் பகுதி, இரண்டாம் பகுதி முறையே ஏப்ரல் மாதம் முப்பதாம் திகதி, மே மாதம் ஆறும் திகதி, மே மாதம் ஏழாம் திகதி ஆகிய மூன்று நாட்களில் நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது! இந்த மூன்று தினங்களில், முதல் இரண்டு நாட்களில் தமிழ் முதல் பகுதி பரீட்சையும் மே ஏழாம் திகதி தமிழ் இரண்டாம் பகுதி பரீட்சையும் நடைபெறுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது இதன் எதிரொலியாக எந்த நாளில் முதலாம் பகுதி இரண்டாம் பகுதி நடக்கும் என்பது பரீட்சார்த்திகளுக்கு புரியாதிருக்கிறது. எதையெல்லாம் நாம் எதிர்பார்க்கும் பரீட்சைப் பகுதியில் இப்படியும் நடக்கிறது.

ஊடுருவி

## எங்கள் அனைவரையும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

— "அதற்கு நான் தயார்" என்று பதிலிறுத்தார் அத்தனகல உறுப்பினர்!

"நீர் கோழை இல்லாவிடின் இப் பிரேரணைக்கு ஆதரவளியும்; உம்மீதான விசாரணையை முதலில் நடத்துகிறோம்" என்றும் சொன்னார் பிரதமர்.

### அமிரின் எதிர்வாதம்

ஜனாதிபதிக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைச்சரவையே கூட்டுப்பொறுப்பு என்ற திருமதி சிறிமாவோவின் கூற்றை ஆணைக்குழுவே நிராகரித்திருக்கிறது

— அப்படியின்றி, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பே என்பது உண்மையானாலும் அமைச்சரவையில் அதற்கு எவராவது பொறுப்பேற்க சம்மதமற்றவராக இருந்திருப்பின் ராஜினாமாச்செய்திருப்பர். எனவே எப்படிப் பார்த்தாலும் இதில் விசாரணைக்கு எதுவுமில்லை என்று பிரதமரின் வாதத்திற்குப்பதில் வாதம் நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், நாம் இதனை எதிர்ப்பதுடன் இதுதொடர்பான தெரிவுக்குழுவிலும் இடம்பெற மாட்டோம் என்பதை நேரடியாகவே தெரிவிக்கிறேன் என்றும் சொன்னார்

திருமதி சிறிமா தொடர்பான குடியியல் உரிமை நீக்கம் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தையுமே எதிர்த்து வந்த திரு. அமிர்தலிங்கம். அரசின் இந்த நடவடிக்கை இழிவானதொன்றுஎன்றும் சொன்னார். இது முற்றிலும் அவசியமற்றதென்பதே அமிரின் நிலை.

'சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தவறான நடவடிக்கை இது' என்று சபையில் இப்போது அநேகமாக அனைத்து விவாதங்களிலுமே 'ஆஜராகும்' 'புதிய' சட்டத்தரணியான சரத்முத்தட்டுவேகம வாதிட்டார்.

எதிர்க்கட்சிகள் மூன்றுமே எதிர்ப்பு/-தெரிவுக் குழுவில் பங்குபற்ற மறுப்பும்தெரிவித்த போதும் அரசின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒரு மணி நேரம் நீடித்த கோப்பாய் உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் அனுதாபத் தீர்மானத்தின்மீது நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல்லும் நீதி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்னவும் நிகழ்த்திய உரைகள் பொன்னானவை

வியாழக்கிழமை சுகாதார சேவையைப் பன்முகப்படுத்துவது தொடர்பான வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தை நிகழ்த்த கட்சித்தலைவர்களின் தீர்மானத்தை சபைக்கு அறிவிக்கபோது 'நான் இதை எதிர்க்கிறேன், இன்றைய சபை நிகழ்ச்சிகள் தொடர்பான ஒழுங்குப்பத்திரத்தில் இது இல்லை, இதன்மீது விரிவான விவாதம் நிகழ்த்தவிருப்பதால் நான் ஆயத்தமில்லை' என்றார் முன்னாள் சுகாதார அமைச்சரான கடுவல உறுப்பினர் திரு. எம். எச். ஜயவர்த்தன.

அவர் விருப்பப்படியே மறு நாள் அவ்வெள்ளை அறிக்கை விவாதிக்கப்பட்ட போது எம். டி. எச்சின் பேச்சு தாக்கமாகவும் நகைச்சுவையாகவும் இருந்தது!

### ஒற்றைக்கால் வெள்ளை அறிக்கை

"ஒற்றைக்காலில்தான் நிற்கிறது இந்தவெள்ளை அறிக்கை; அந்தக் கால்கூட ஊனமுற்ற காலாகத்தானிருக்கிறது" என்றார் அவர்.

அரசாங்க மருத்துவர் தனிப்பட்ட சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவது. இவ் விவாதத்தில் எதிர்க்கட்சியினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஹோமியோபதி மருத்துவத்துக்கு அரசு செலவிடும் பணத்தை பேயாட்டத்தை ஊக்குவிக்க செலவிடலாம். ஹோமியோபதி மருத்துவத்தைவிட பேயாட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அதிகம்பேர் என்றார் எம். டி எச்.

"நாம் இங்கு விளையாடவா வருகிறோம்?" என்று கலவான உறுப்பினரின் கடுமையான வார்த்தைதான், எதிர்க்கட்சித் தலைவரின் அநுசரணையோடு கடந்தவார அமர்வின் முடிவில் சபையில் ஒலித்தது. ஒத்திவைப்பு வினாக்களுக்கு விடையளிக்க அமைச்சர்கள் சபையில் இல்லாதபோதே சரத் இச்சரத்தைத் தொடுத்தார்.

புதிய ஆண்டு இவற்றை நிவர்த்திசெய்யும் என்று கிரிப்பொலியை எழுப்பி சபையை ஒத்திவைத்தார் பிரதி சபாநாயகர்.

# யாழ். நகரில் மின்சார அபிவிருத்திக்கு 12 லட்சம் ரூபா செலவு!

## புதிய விஸ்தரிப்புக்கு சுமார் ரூ. 3 லட்சம்

### மேயர் விசுவநாதன் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் மின்சார அபிவிருத்திக்காக சுமார் 12 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக யாழ் நகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இம் மாநாட்டில் உதவி முதல்வர் திரு சேவியர், சுகாதார வைத்திய அதிகாரி திரு. வேதாரணியம் மற்றும் இலாகா உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேலும்வட்டார ரீதியாக மின்சார அபிவிருத்திக்காக செலவிட்ட தொகை பற்றி விபரமாக எடுத்துக் கூறினார்.

மேயர் தொடர்ந்து இது பற்றி விளக்கிக்கூறுகையில் சொன்னதாவது:

புதிய மின்விஸ்தரிப்பு வேலைகளுக்காக 2,87, 114 ரூபா செலவிட மதிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரஅபிவிருத்தி வேலைகளுக்கு பிரதம மின்பரிசோதகரின் அனுமதிபெறவேண்டும். அத்துடன் மின்பொருட்கள் பெரும் தட்டுப்பாடு. இந்த நிலையில் பலத்த கஷ்டத்தின் மத்தியில்தான் மின்அபிவிருத்தி வேலைகளைச்செய்துவருகின்றோம்:

"மின்சார ஊழியர்களின் நியமனங்களிலும் பலத்த தாமதம் ஏற்பட்டுவருகிறது. உள்ளூராட்சி அமைச்சு நாலு இலை மென்னை நியமிக்க ஆறு மாத கால தாமதம் எடுத்தது. ஒருவர்மட்டும்தான் நியமிக்கப்பட்டுள்ளார். தொழில்நுட்ப ஊழியர்களும் இல்லை,

40 வருடத்திற்கு மேலாக மின்வயர்கள் பழையதாக இருக்கிறது. புதிய மின்வயர்கள் போடவேண்டும். ஆதலால் எல்லாவற்றுக்கும சபையை குற்றஞ்சொல்லமுடியாது.

மின்சாரப்பகுதிக்கு ஒரேஒரு வாகனம் மட்டும்தான் இருக்கிறது. மின்சார பகுதி நட்டத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது.

"மின்சாரப் பகுதியை மின்சார சபை பொறுப்பேற்கும் என்று நான் நினைக்கவில்லை சபை பொறுப்பேற்றால் மின் கட்டணம் கூடும். தற்போது உள்ளது குறைந்த கட்டணமே.

நிருபர்: சபை பொறுப்பேற்கப்போவதாக அறிந்து மின் பகுதியில் கூடிய ஊழியர்கள் திணிக்கப்பட்டதாலேயே, சபை பொறுப்பேற்கத் தயங்குகிறது என்பது உண்மையா?

முதல்வர்: யாழ் மாநகர சபையைப் பொறுத்தவரை அப்படி ஒன்றும் நடக்கவில்லை

நிருபர்: களவாக மின்சாரம் எடுப்பவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

முதல்வர்: தகவல் கிடைத்ததும் முதலில் துண்டிப்போம் பின் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

நிருபர்; கொழும்புத்துறை மின்நிலையத்தில் இரண்டு மின் முகாமையாளர்கள் மாற்றப்பட்டனரா?

முதல்வர்: ஒருவரே மாற்றப்பட்டார். சுமுகமான நிலையை ஏற்படுத்த மாற்றம்செய்யப்பட்டது. கொழும்புத்துறை மின் உப-நிலைய சம்பவத்தில் எவ்வித பாரபட்சமும் காட்டாமல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நிருபர்: தென்பகுதியிலுள்ள அரசுக்கு ஆதரவான மாநகர சபைகளிலும்பார்க்க எதிர்கட்சியுள்ள இச்சபைக்கு ஏதாவது பாகுபாடு காட்டப்படுகிறதா!

முதல்வர்: குந்தகம் எதுவும் இல்லை. ஆனால் உதவிகள் உடனடியாக கிடைப்பதில்லை மனிதக்கழிவு அகற்றும் திட்டத்திற்கு 10லட்சம் ரூபாகிடைக்கவில்லை. உத்தியோகத்தர் நியமனத்தில் தாமதம் இப்படியான கஷ்டங்கள் உண்டு.

நிரு: 2 வருடம் முடிந்து விட்டது இன்னும் 2 வருட முடிவில் இந்நகரம் எந்த நிலையில் அபிவிருத்தியடைந்திருக்கும் என்று சொல்வீர்களா?

முதல்வர்: அதனைஎடுத்து விபரிக்கமுடியாது.

முதல்வர்: திரு. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது: 79ல் 2 வீதி ரோலர்களை தருமாறு அரசிடம் கேட்டோம். பிரதமர் இங்கு விஜயம் செய்தசமயத்தில் 2 அரதரோலர்களும் நமக்குக்கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்திற்கு 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவிற்கு நூல்கள் வாங்கிவருகிறோம். நூலக கமிஷன் அறிக்கையை அமுல் செய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் ஏனைய நகரங்களிலும் பார்க்க சோலைவரி மிகக்குறைவு. சோலைவரி மீளாய்வு 75ம் ஆண்டு செய்யப்பட்டது. பின் 80ம் ஆண்டு செய்திருக்கவேண்டும். ஆனால் செய்யவில்லை மக்களுக்கு அதிக கஷ்டம் கொடுக்கக் கூடியதென்பதற்காக செய்யவில்லை.

தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றையே அமுல் செய்துவருகின்றோம்.

சுகாதாரப்பகுதி நிர்வாகத்தைத் திறம்பட செய்வதற்காக அதிகாரத்தை துணை முதல்வரிடம் வழங்கியிருந்தேன் மக்களின் ஒத்துழைப்புடனும் சுகாதார பகுதி ஊழியரின் ஒத்துழைப்புடனும் நன்கு செய்து வருகிறார்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து முதல் 6 மாதகாலமும் சுகாதார வைத்திய அதிகாரி இல்லை. அதன் பின்னரேபெறக் கூடியதாக இருந்தது."

### கூட்டணியும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

முயன்று வருகிறது. இதுதவிர தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் போட்டியிடவுள்ளது. இந்நிலையில் கூட்டணியின் சார்பில் எந்த வேட்டாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த பொதுத்தேர்தலின் போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல தேர்தற் தொகுதிகளிலுமே கூட்டணி வெற்றி பெற்றபோதிலும் கூட மாவட்டத்தில் கூட்டணிக்கு எதிராக இடப்பட்ட வாக்குகளின் தொகையையும் தற்போதய தேர்தல் முறையையும் கருத்தில் கொண்டு நோக்குகின்றபோது மாற்றுக்கட்சியினரிலும் கணிசமான தொகையினர் அபிவிருத்திச்சபையினுள் நுழைய வாய்ப்புண்டு என்றே கருதலாம்.

நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலில் தமிழ்ப்பகுதிகளின் மிகப் பெரிய உள்ளூராட்சிமன்றமானயாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தேர்தலும் இதற்கு உதாரணமாகும்.

வேட்பாளர்களை நியமிக்கும் போது அவர்களது திறமைகளை மட்டுமோ அல்லது கட்சிக்கும் அவர்களுக்குமிடையேயுள்ளதொடர்புகளையட்டுமோ கருத்தில் கொள்ளாது அவர்கள் வாழும் பகுதிகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். கூட்டணியைப் பொறுத்தமட்டில் அவர்களது இலட்சியத்தை அடைவதற்கு இந்தச்சபைகள் உதவுமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதனை ஆதரித்த கூட்டணி-மாவட்டத்தின்சகல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் செல்லவும் வகை செய்ய வேண்டியது அவசியம்.

வட்டுக்கோட்டை, மானிப்பாய், காங்கேசன்துறை ஆகிய தேர்தற் தொகுதிகளிலிருந்து ஒருவரையும், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி, பட்டினப்பகுதி (யாழ்ப்பாணம், நல்லூர் தொகுதிகளிலிருந்து) தலா ஒவ்வொருவரையும் சிறுபான்மைத் தமிழர் ஒருவரையுமாக மொத்தம் அறுவரை முதலில் தெரிவு செய்துவிட்டு ஏனைய வேட்பாளர்களைத் தகுதி அடிப்படையிலோ அல்லது கட்சிக்காக அவர்கள் செய்த பங்களிப்பின் படியோ நியமிக்கலாம்

இந்த நடைமுறையைக் கூட்டணி பின்பற்றுமா?

பி. எஸ். அல்பிரட், ஊர்காவற்றுறை.

## நயினாதீவில் திருக்குறள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ்மறைக்கழகத்தின் 21வது திருக்குறள் மாநாடு அடுத்தமாதம் 18ம், 19ம் திகதிகளில் நயினாதீவில் நடைபெறவிருக்கிறது

விழாவை நடத்துவதற்கு பின்வருவோர் அடங்கிய மாநாட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

தலைவர்; வித்துவான் பண்டிதர் நா. கந்தசாமி, துணைத் தலைவர்கள்;சி நா மதியாபரணம், வை கணபதிப்பிள்ளை, செயலாளர்; நா. சிவராசசிங்கம், துணைச் செயலாளர் க. உருத்திரகுமார், பொருளாளர் சி. சிவானந்தன், மேலதிக உறுப்பினர்கள்: நா. க சண்முகநாதபிள்ளை, க ஈ. தர்மலிங்கம், கு. சாந்தலிங்கம், கு பரமேஸ்வரன், வ. விக்கினேஸ்வரன், நா. க. குமாரசூரியர், இ. சிவபாதசேகரம், த செல்லத்துரை, வே கந்தையா, அ தில்லையா, சோ சின்னத்துரை, க. அந்தோனி. (இ)

## இடமாற்றம்

(மல்லூர்)

பேசாலை கிராமாட்சி மன்றத்தின் பிரதம எழுது வினைஞர் திரு வி செல்வநாயகம் கொக்குவில் கிராமாட்சி மன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கு)

## நாடும் நடப்பும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாய்க்கு எங்கே அடிபட்டாலும் அது காலைத்தான் தூக்கிக்கொண்டு ஓடும். அதே போலதேர்தல் பிரசாரம் என்று வந்தால் "தமிழர் பிரச்னை"தான் தலைதூக்குமென்பது கடந்தகால அனுபவம்!

பிரபல சிங்களப் பாடகரும் இசைவித்துவானும்வானொலிக் கலைஞருமான சுனில் சாந்தா சில தினங்களுக்கு முன் காலமானார். அந்தக் கலைஞரின் இறுதிக் கிரியைகளுக்கான ஒழுங்குகள் அனைத்தையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்று நல்லமுறையில் மறைந்தகலைஞரைக் கௌரவித்திருப்பது பாராட்டுக்குரியது.

ஊர்சுற்றி

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

JAFFNA

# யாழ் சாரணன்

ஈழநாடு. யாழ்மாவட்ட சாரணர் சங்க
இணை வெளியீடு

தொகுப்பு நா. நல்லையா, தலைவர் பயிற்றுநர் பயிற்சி. இ. தவகோபால், தருசின்னப் பயிற்சி.

## மலர்ந்தது புத்தாண்டு

புத்தாண்டை பூண்டு, புதிய சிந்தனைகளோடு மிளிரும் சாரணர்களே! வாசகர்களே! எமது இதயம் கனிந்த மகிழ்ச்சிகரமான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இப்புத்தாண்டு இதழில் ''பாடுவோம் எல்லோரும்'' என்று உங்களையெல்லாம் அன்பாக அழைக்கின்றார் எமது மாவட்ட ஆணையாளர். அவர் எம்மை எல்லாம் பாட அழைத்தாலும், பாடலைக் கேட்கின்றபோது எமது ஸ்தாபகர் பேடன் பவல் அவர்கள் கட்டளையிடுவது போல் இப்புத்தாண்டு தினங்களில் எம் வாக்குறுதியையும் விதிகளையும் எம் மனதில் பதியவைப்பதாக அமைவதுடன் நீங்கள் எல்லோரும் இவ் வாக்குறுதிக்கும் விதிகளுக்கும் அமைய வாழ்ந்து, ஏனைய சிறுர்களுக்கு முன்மாதிரியாக இருங்கள் என்று அன்புக் கட்டளையிடுவதுபோல மைஇன்றது. ஆகவே இப்புத்தாண்டில் இதை எம் சிந்தனையாகக்கொண்டு எமது வாக்குறுதிக்கும் விதிகளுக்கும் அமைய வாழ்ந்து இந்நாட்டின் நற்பிரஜைகளாவோம் என்று திடசங்கல்பம் செய்வோம்.

0 0 0

திருமதி ஆர். எச். செல்வராஜா அவர்களின் அயரா உழைப்பினுல் எதிர்வரும் 20ம் திகதி தொடக்கம் குருளைச் சாரண தலைவர்கட்கான உயர்பயிற்சி- அவத்தை IV நடைபெற இருப்பது மகிழ்ச்சிக்குரியதும் போற்றுதற்குரியதுமாகும். அதுவும் பல ஆண்டுகளுக்குப்பின் இத்தகைய ஒருபயிற்சி முற்றுக தமிழில் நடைபெறவிருப்பது பாராட்டுதற்குரியதாகும். இவரைப் போன்று ஒவ்வொரு தலைவர்களும் உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றுவார்களாயின் தமிழ்பேசும் இடங்களிலெல்லாம் சாரணியம் தழைத்தோங்கி வளரும் என்ற நம்பிக்கை ''யாழ். சாரணர்''க்கு உண்டு இவரது சேவையைப் பாராட்டுவதுடன் குறிப்பிட்ட பயிற்சி நெறி சிறப்பாக நடைபெற எம் வாழ்த்துக்கள்

★ சாரணிய வரலாறு—3

# உலக சாரணிய அடிப்படை தத்துவங்கள்

சாரணிய வரலாறு - 2இல் பிறவுண்சீத் தீவில் முதலாவது பரீட்சார்த்த பாசறை வாசத்தின்விபரங்களைப் பார்த்தோம். சாரணியத்தின் தந்தை பேடன் பவல் அவர்கள் எத்தகைய தத்துவங்களை மனதில் கொண்டு பயிற்சித் திட்டங்களை உருவாக்கி 1907 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட பாசறை மூலம் பரீட்சித்துப் பார்த்தாரோ அந்த அடிப்படைத் தத்துவங்களில் இன்றும்ஒரு விதமாற்றங்களும் ஏற்படவில்லை. ஆனல் அதே தத்துவங்கள் ஆராயப்பட்டு தொகுக்கப்பட்டு உலக சாரணர் சம்மேளத்தினுல் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த அடிப்படைத் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளும் நாடுகள்தான் உலக சாரணிய சம்மேளனத்தில் அங்கத்துவம் பெறலாம். ஒவ்வொரு நாடும் தனது பொருளாதார, கலை கலாசாரத்திற்கு ஏற்றவாறு பயிற்சித்திட்டங்களில் மாற்றங்கள் செய்யமுடியும். ஆனல் அடிப்படைத் தத்துவங்களில் இருந்து வேறுபட முடியாது. உலக சாரண சம்மேளத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைத் தத்துவங்களாவன:-

### சமயத்திற்கான கடமை

இவ்வியக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொருவரும ஏதாவது ஒரு சமயத்தை சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். சமயநம்பிக்கையற்றவர்களுக்கு இவ்வியக்கத்தில் இடமில்லை. பெயரளவில் ஒரு சமயத்தை சார்ந்தவராக மாத்திரமிருந்தால் போதாது. அவர் அச்சமயத்தை பின்பற்றுபவராகவும் அச்சமயத்திற்கான தனது கடமையை செய்பவராகவும் இருக்கவேண்டும்.

### நாட்டுப்பற்று

ஒருவர் தன்னைப் பெற்ற அன்னைமேல் எவ்வளவு பற்று வைத்துள்ளாரோ தான் கற்ற பாடசாலையில் எவ்வளவு பற்று வைத்துள்ளாரோ அதிலும் மேலாக தான் பிறந்த நாட்டில் பற்றுடையவராக இருக்க வேண்டும்.

நா. நல்லையா ALT
(உதவி மாவட்ட ஆணையாளர் பயிற்சி)

### சகோதரத்துவமும் நட்பும்

உலகின் சாரணர்கள் யாவரும் இன, மத, மொழி, வேறுபாடின்றி ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்களாகவும், ஏனையவர்களுடனும் பிற உயிர்களிடத்தும் நட்புடையவர்களாகவும், அன்புடையவர்களாகவும் இருக்கவேண்டும்.

### பிறர்க்கு சேவை செய்தல்

எவர்க்கு உதவி தேவைப்படுகின்றதோ அவர்கட்கு எந்நேரத்திலும் உதவிசெய்ய தயாராக விருத்தல். சேவையே இவ்வியக்கத்தின் அடிப்படைத் தத்துவம்.

### விதிகளுக்கு அமைய வாழல்

சிறந்ததோர் மனிதனுக வளர தேவையான குண இயல்புகளை விருத்தி செய்வதற்கு ஏற்ற சாரண விதிகளுக்கு அமையவாழ்தலும் தான் எடுத்துக்கொண்ட வாக்குறுதியை மீறது அதற்கு ஏற்ப கட்டுப்பாடாக வாழ்தல்.

### இஷ்டபூர்வமான அங்கத்துவம்

இது ஒருவரின் வற்புத்தலின் பேரில் கட்டாயப்படுத்தப்படுவதொன்றன்று. தனது சொந்த விருப்பின் பேரில் அங்கத்துவம பெறலாம். எந்நேரத்திலும் விலகிக்கொள்ளலாம். இது இவ்வியக்கத்தின் ஒரு தனித்துவமாகும்.

### அரசியல் சார்பற்றது

இவ்வியக்கம் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையோ அல்லது அரசியல் இயக்கத்தையோ சார்ந்தது அல்ல. தான் வாழும் சமூகத்திற்கான ஓர் இயக்கமாகும்.

### முன்னேற்ற செய்திட்டம்

இச் செய்திட்டம் மூலம் இளம் சிறுர்களையும் வாலிபர்களையும் நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்குதல் இது அணி, குழுமுறைகளிற் பயிற்சியளிப்பதனுலும், தரப்பட்ட சின்னங்களுக்கான தொகுதிகளினுலும், பரீட்சைகள், ஆடல், பாடல், விளையாட்டுக்கள், சமூக சேவை, வெட்டவெளி செயற்பாடுகள் மூலமும் அமுல் நடத்தப்படும்.

## உலக சாரணிய இயக்கத்தின் குறிக்கோள்

சாரணியம் என்பது கல்விசம்பந்தமான ஓர் இயக்கமாகும் இளஞ்சிறுர்களை தன்னம்பிக்கையுடையவர்களாகவும், தான் வாழும் சமூகத்திற்கு ஓர் உபயோகமுள்ளவராகவும், தேசப்பற்றுள்ளவராகவும் பொறுப்புணர்ச்சியுள்ளவராக்குவதுமாகும், தனது கடமைகளையும், தான்பிறர்க்குசெய்ய வேண்டிய கடமைகளையும் தனது சமயத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளையும் எந்நேரத்திலும் செய்ய ஆயத்தமாயிருக்கச்செய்வதே.

## குருளைச்சாரணத் தலைவர்கள் உயர் பயிற்சி-அவத்தை VI

மேற்படி உயர் பயிற்சியாகிய குருளைச்சாரணத் தலைவர்கள் தருசின்னப்பயிற்சி இம்மாதம் 20ம் திகதி தொடக்கம் 27ம் திகதிவரை கைதடி நவபீலிட் பாடசாலையில் நடைபெறும் இப் பயிற்சிநெறியின் இயக்குனராக உதவிப்பிரதம ஆணையாளர் (குருளையர்) உம், தலைவர் பயிற்றுனருமாகிய திரு. ஆர். சிறி கிருஷ்ணராஜா அவர்கள் கடமையாற்றுவார்கள். தேசிய தலைமைச் செயலகத்திலிருந்து சிறப்பு பயிற்றுனர்களாக தேசிய பயிற்சி ஆணையாளரும் தலைவர் பயிற்றுனருமாகிய திரு. பி. எஸ். ஆர். இராஜமணி அவர்களும் சிரேஷ்ட வெளிக்கள ஆணையாளரும் தலைவர் பயிற்றுனருமாகிய நிஹால் டி மெல் அவர்களும் கலந்துகொள்கிறுர்கள். நெறியின் பயிற்சிக்குழுவில் உதவித் தலைவர் பயிற்றுநர்கள் திரு. பி. சிறீஸ்கந்தராசா திருமதி ஆர். எச். செல்வராசா, திருவாளர்கள் நா நல்லையா, ஈ. எஸ். அரசரத்தினம், என். போஜன், திருமதிகள் எம் கணபதிப்பிள்ளை, ஆர். ஜே பி. சேவியர் அவர்களுடன் திரு ஆர் தவகோபால் தருசின்னப் பயிற்சியிலும் அங்கம் வகிக்கின்றனர்.

திருமதி ஆர். ஹட்சன் செல்வராஜா உதவித்தலைவர் பயிற்றுனர் அவர்களின் சேவை மனப்பான்மையாலும், கடின உழைப்பாலும்தான் இப் பயிற்சிநெறி உருவெடுத்தது எனலாம். சென்ற இருவருடங்களாக அவர் பல பயிற்சி நெறிகளை நடாத்தியும் பல்வேறு குழுக்களுக்கு தாமே நேரில் சென்று குருளைச் சாரணத் தலைவர்களையும் கல்லூரி அதிபர்களையும் ஊக்குவித்து இப்பயிற்சிநெறியில் பங்குகொள்ளவைத்ததும் சென்ற ஆண்டு 39 தலைவர்கட்கு ஆதாரப் பயிற்சி ஒன்றை நடாத்தியதும் குறிப்பிடத்தக்கவையாகும். இவருக்கு இவ்விடயத்தில் வெளிக்கள ஆணையாளர் திரு. பி. சிறிஸ்கந்தராசா, பல்வேறு உதவிகளைப் புரிந்துள்ளார்கள். இவ்விருவர்களுடைய முயற்சியினுலும் பயிற்சிக்குழு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினுலும் தான் இப் பயிற்சி நெறி நடைபெறவிருக்கிறது.



யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிள் மூலம் மட்டக்களப்பு சென்று திரும்பிய யாழ். மாவட்ட திரி சாரணர்கள். இடமிருந்து வலமாக எஸ். கிருபானந்தன், து சிறீமோகன், செ. தேவரஞ்சன், ஆர். சிறீதரன், அ. ராஜா ஆகியோர்களை இப்படத்தில் காண்க.

## ★ பாடுவோம் எல்லோரும்

பாடுவோம் எல்லோரும்
பலவித துன்பங்கள்
பனிப்போல மறைந்திட
பாடுவோம் எல்லோரும்.

### வாக்குறுதியும் விதிகளும்

(நல்லபெயரை வாங்கவேண்டும் பிள்ளைகளே என்றமெட்டு)

நல்லபெயரை வாங்கவேண்டும் சாரணரே—நாம்
நாளும் நல்ல சேவைசெய்து நாட்டைக் காப்போம்
வீரர்களே — நல்ல

●

வழிகாட்டும் சமயம், நல்லெணில் கொண்டு மிளிர்நம்
வளமான தேசம்யாவும் புரிவோமே கடமை
பிறருக்கு உதவி நாம் புரிவோமே தினமும்
விதிகட்கு அமைந்து நடப்போமே நாமும்—நல்ல.

●

நம்பிக்கை, பணிவு, உதவி, சிநேகம்
நல்மரியாதை, இரக்கம், கீழ்ப்படிவு,
மகிழ்ச்சி, சிக்கனம், சுத்தமாம் பதிதும்
மாவீரன் பவலே விதியெனத் தந்தார்—நல்ல.

-- சி. கந்தமூர்த்தி ALT,.
(யாழ். மாவட்ட ஆணையாளர்)

**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
**மீனவ நண்பன்**
(ஈஸ்மன் கலர்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30;
சனி, ஞாயிறு 3-30
சிவாஜி—கே. ஆர். விஜயா
**தாய்**

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**வல்லவன் ஒருவன்**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-விஜயா
**தங்கை**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
**50-வது நாளை நோக்கி**
* ரஜனி காந்த் * ஷோபா
* ஸ்ரீபிரியா * சுமன்
* சௌகார் ஜானகி நடித்த
**தீ**
இலங்கை-இந்திய தயாரிப்பு

**சாந்தி** (யாழ்நகர்) கடைசித் தினம் 19-4-81 போன்: 7643
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
**திசைமாறிய பறவைகள்**
20-4-81 "AUDREY ROSE"
(Color - Adults only)

**மனோகரா** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
**கவரிமான்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
**பட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
**ராஜா** யாழ்ப்பாணம், **சாந்தி** மட்டுநகர்
நகரில் திரையிடப்பட்ட படங்களில் முன்னணியிலுள்ளது பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30 | தினசரி: 2-30, 6-15, 9-30
● பாக்கியராஜ் ● ரதி ● சதிஸ்ரீ
**புதிய வார்ப்புகள்**
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
★ சிவாஜி ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா
★ சுந்தரராஜன் நடித்த
**ரிஷிமூலம்**
(ஈஸ்மன் கலர்)


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 3-ம் திகதி
புதன்கிழமை
(15-4-1981)

மேடம்: நடுநிலை தவறாது நல்லதைச் செய்வீர்கள், உங்கள் புத்திக்கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள். குடும்பவாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்கும். பழைய நண்பரின் சந்திப்பும் கிடைக்கும்.

இடபம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன் பிறந்தவர்களாலே தொல்லைகள் தோன்றக்கூடும்.

மிதுனம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் இடம்பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும்.

கடகம்: எண்ணியதில் தடங்கல் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

சிங்கம்: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் கிடைக்கும். புண்ணிய காரியங்களில் மனம் நாடும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

கன்னி: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

துலாம்: பல வழிகளிலும் பணவரவிற்கு இடமுண்டு. வழக்கறிஞர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம் பிள்ளைகள் மூலம் பெருமைதரும் சம்பவங்கள் நடைபெறும். வரவேற்கவேண்டிய நாள்.

விருச்சிகம்: கழுகுப்பார்வை வட்டமிடும் காத்திருப்பர் பகைவர். நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில் நிதானம் வேண்டும்.

தனு: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக்குமைச்சலினால் வேதனைப்படுவீர்கள், சிறிய விஷபத்திற்கும் இடமுண்டு. தெய்வ நம்பிக்கைவேண்டும்.

மகரம்: நலன்தரும் சம்பவங்கள் இடம்பெறும். நலிவு சொல்லாமல் பறக்கும் இல்லத்தில் இனிமை பிறக்கும். சுப்மான தினம்.

கும்பம்: ஆணவப் பேச்சினால் அடிசறுக்கநேரிடும். குடும்பத்திலும் சிறியபூசலுக்கு இடமேற்படலாம். வயதுமுதிர்ந்த பெண்மூலம் அவப்பெயருக்கு இடமுண்டு. சுகாதாரத்தைப் பேணுவதுடன் அடக்கம் நன்று.

மீனம்: பொருளாதாரத் துறையில் விருத்தி ஏற்படும். பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும், புதிய முதலீடுகள் வெற்றியைத்தரும். குடும்பத்தில் சுமுகமான நிலை ஏற்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# கோரிக்கை

[புளியங்குளம்]

யாழ்ப்பாண மாவட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் கிழக்குக்கரையோரமாக இணைப்பதற்கு சாலை என்னும் இடத்தில் ஒரு தாம்போதி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அம்பலவன்பொக்கணை என்ற இடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முல்லைத்தீவுப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் தீவிரவாத இளைஞர்கள் வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிய வருகிறது. (அ)


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
**முள்ளும் மலரும்**
போன்: 881 (கலர்)


# "விலைக்கட்டுப்பாட்டுப் பொருட்களில் சாராயத்தையும் சேர்க்கவும்"

(மன்னார்)

"மன்னார் மாவட்டத்தில் போதியளவு விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் இல்லாததால், கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளைப் பிடிக்கமுடியாதிருக்கிறது. இதனால் பாவனையாளர்கள் பாதிப்படைந்து வருகிறார்கள்."

இவ்வாறு பேசாலை சென் யூட்ஸ் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் உள்நாட்டு வர்த்தக பொறுப்பதிகாரி ஜனாப் எம். ஏ. எஸ். எம். வை. மரைக்கார் தெரிவித்தார். சங்கத் தலைவர் திரு எம். ரி. தாசன்துரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. எம். ஜே. எல். பெர்னாண்டோ, திரு. அல்பிரட் குலாஸ், திரு. ஸ்ரீபன் பெர்னாண்டோ, திரு. லோ. மரியதாஸ் பீரிஸ், திரு. கஸ்பார்துரம், திரு. யுஸ்ரின் பீரிஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாப் மரைக்கார், "சாராயம் விலைக்கட்டுப்பாட்டுப் பொருட்களில் அடங்கவில்லை. இதனால் சாராய விற்பனையில் பல மோசடிகள் இடம்பெறுகின்றன. சில இடங்களில் அளவு குறைத்தும், விலையைக் கூட்டியும், கலப்படம் செய்தும் விற்பனை செய்யப்படுகிறது. எனவே சாராயத்தையும் விலைக்கட்டுப்பாட்டுப் பொருட்களுடன் சேர்க்க வேண்டும்" என்றார்.

கூட்டம் முடிவுற்றதும் உள்நாட்டு வர்த்த உதவி ஆணையாளர் திரு. எம். ஜே. எல். பெர்னாண்டோ, மன்னார் உள்நாட்டு வர்த்தகப் பொறுப்பதிகாரி ஆகியோர் பேசாலையில் உள்ள பேக்கரிகள், ஹோட்டல்கள், பலசரக்குக் கடைகள் என்பவற்றிற்குச் சென்று பொருள்கள் யாவும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதனைப் பார்வையிட்டனர். (அ)

# "சமய நெறிகளை உண்மையாக பின்பற்றினால் சமுதாயத்தில் அமைதி நிலவும்"

(புங்குடுதீவு)

"ஆலயங்களை வானுயரக் கட்டிவிடுவதால்மாத்திரம் பிரயோசனமில்லை. நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்வதும் சமயதர்மத்துக்கேற்ப ஒழுகுவதுமே முக்கியமானதாகும். சமயநெறிகளை மக்கள் உண்மையான முறையில் பின்பற்றினால்தான் சமூகம் உயர்ச்சி அடையும். சமுதாயத்தில் அமைதி விளங்கும்"

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சபையின் புதுவருட நிர்வாகிகள் தெரிவின்போது தலைவராக ஆசிரியமணி இ. குலசேகரம் பிள்ளையும், உபதலைவர்களாக வே. சபாபதிப்பிள்ளை, அ. சண்முகநாதன் ஆகியோரும் செயலாளராக வே. சுப்பிரமணியமும், உபசெயலாளராக ந. விஜயரத்தினமும், பொருளாளராக இ. இரத்தினசபாபதி ஆசிரியரும், உபபொருளாளராக எஸ். எம். தனபாலன் ஆசிரியரும், கணக்காய்வாளராக எஸ். கே. மகேந்திரனும், காப்பாளர்களாக வி. இராமநாதன், சிவஸ்ரீ இ. முத்துக்கிருஷ்ணக்குருக்கள், வ. வே. இளையதம்பி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பத்துப்பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவானது (கு)

# தவக்கால நற்சிந்தனை



இதோ உன் தாய்.

'உலகிலிருந்த தம்மவர் மேல் அன்புசார்ந்திருந்த இயேசு இறுதிவரை அவர்கள் மேல் அன்புகூரலானார்.' உலகைவிட்டுத் தாம் பிரிய இருந்த நேரத்தில் தம் தாயை இறுதி அன்புப் பரிசாக அளிக்கிறார்.

ஆதரவற்ற தம் தாயைத் தாம் அன்புசெய்த சீடரிடம் ஒப்படைப்பது இயேசுவின் கடமையுணர்வைக் காட்டுகிறது. தம்முடைய துன்ப, துயரவேளையிலும் தம் தாயின் திக்கற்ற நிலையை உணர்ந்தவராய் இருந்தார். தம்மை இறுதிமட்டும் கல்வாரிவரை பின்பற்றிய அப்போஸ்தலருள் ஒருவரான அருளப்பரிடம் தம் தாயை ஒப்படைக்கிறார். 'இதோ உன் தாய்'

உண்மையில் கன்னிமரியாள் இயேசுவின் அன்புச்சீடருக்கு மட்டும் தாயாக அருளப்படவில்லை. இயேசுவை அன்பு செய்யும் அனைவருக்கும் அவள் தாயாகத் தரப்பட்டாள். எனவேதான் இயேசுவில் விசுவாசம் கொண்டு அவரை நேசிக்கும் அனைவரும் மரியாளை "அம்மா" என்று அழைக்கமுடிகிறது. மரியாள் நம் எல்லோருக்கும் மாதிரியாக இருக்கிறாள். மகிழ்ச்சியை, துன்பத்தை, நன்மையை, தீமையை நற்கருத்தோடு ஏற்றுக்கொண்டு நமக்கு வழிகாட்டுகிறாள். அவளது வாழ்வைக் கண்டு பாவிப்போம்.

-அருட்திரு மேரி பஸ்ரியன்

# முதலிடம் பெற்றார்

(நெல்லியடி)

நெல்லியடி எல், சீ. சீ. விளையாட்டுக் கழகம் தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நடாத்திய 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியில் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திரு. எஸ். சிதம்பரநாதன் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை திரு. கே. கலாதரன் பெற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை நீதவான் திரு. திரு. கே. எஸ். மகேசன் பரிசில்களை வழங்கினார் (கு

# மாணவர்கள் சகலரும் விடுதலை

புதுடில்லி ஏப். 14

குஜராத்தில் மாணவர்கள் கிளர்ச்சியைக் கைவிட்டதை அடுத்து ஏற்கனவே கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களாகக் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட சகல மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதே சமயம் கிளர்ச்சிநடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட சமூக விரோத சக்திகளுக்கு எதிராக வழக்குத் தொடருவதென்று குஜராத் மாநில அரசு முடிவு செய்துள்ளது. (இ)

# உத்தரத்திருநாள்

(யாழ்ப்பாணம்)

வேலணையில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய சித்திரைத் திங்கள் உத்தரத்திருநாளும் பார்வதி தேவியின் திருமணநாளும் இம் மாதம் 17 ம் திகதி நடைபெறவுள்ளது

இதனைத் தொடர்ந்து இரவு மணவாளக்கோலமும் திருவூஞ்சலும் நடைபெறும். (இ-கு)

## நியூ கேம்பிறிட்ஜ்

மேல்மாடிக் கட்டிடம்
திருநெல்வேலிச் சந்தி

புதிய G. C. E. (A/L) 82/83
வர்த்தகம், விஞ்ஞானம்
தாவரவியல் - சிவவீரசிங்கம், விலங்கியல் - ஜெகானந்தகுரு, பெளதிகம்: விமல்ராஜ், இரசாயனம்: அன்ரன் மாஸ்ரர்.

கணக்கியல்; பாலா மாஸ்ரர்,
தூயகணிதம், பிரயோககணிதம் -
பிரபல ஆசிரியர்.



# ஈழநாடு

The Eelanaadu 60 சதம்


## பிரி. பிரதமர் இன்று இந்தியா விஜயம்

புதுடில்லி, ஏப். 15

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகரட் தட்சர் ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இந்தியாவிற்கு விஜயம் செய்கிறார்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து உலகின் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் திருமதி தட்சர் கலந்துரையாடவிருக்கிறார்.

### கைலாசம் கமிஷன்:

## தமிழ்நாடு அரசின் முடிவு பொருத்தமற்றதாம்!

கருணாநிதி கூற்று

சென்னை, ஏப்.14

"எரிசாராய விவகாரம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட கைலாசம் கமிஷனையே தி. மு. க. எதிர்ப்பதால் அக்கமிஷனின் விசாரணை வரம்பை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்திருப்பது பொருத்தமற்றதாகும்"

மேற்கண்டவாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"கைலாசம் கமிஷனையே தி. மு. க. ஏற்றுக்கொள்ளாத போது தி. மு. க. ஆட்சியின் போது ஏற்பட்டதாகக் கூறப்படும் எரிசாராயப் புகார் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை இக்கமிஷனின் விசாரணை வரம்பிற்குள் சேர்ப்பது அர்த்தமற்றது.

"தி.மு.க. ஆட்சியின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக எதிர்க் குற்றச்சாட்டுகளை கூறுவதன் மூலம் ஆளும் கட்சியினரை காப்பாற்றிக்கொள்ள அ. தி. மு. க. அரசு முயற்சிக்கிறது." (வெ)

### குவைத் நாட்டில்

## திருட்டு நகைகளுடன் அகப்பட்டஇலங்கை வாலிபர்!

குவைத், ஏப். 14

குவைத்தில் திருட்டு நகைகளை விற்கமுயன்ற இலங்கை வாலிபர் ஒருவர் நகைக்கடை உரிமையாளரினால் பொலிசாரிடம் பிடித்துக்கொடுக்கப்பட்டார்.

ஜே. முகமட் என்ற இந்த 26வயது வாலிபர் 20 திருட்டு நகைகளை நகைக்கடைஒன்றில் விற்கமுயன்றபோது அவரில் சந்தேகமடைந்த கடை உரிமையாளர் பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்நபரை பொலிசில் ஒப்படைத்தாராம்.

தற்போதுவேலையற்றிருக்கும் தான் முன்பு குவைத்தில் வேலை செய்த வீடொன்றிலிருந்து சில நகைகளைத் திருடிக்கொண்டு வெளியேறிவிட்டதாகப் பொலிசாரிடம் தெரிவித்ததை அடுத்து அந்நபரின் அறையைச் சோதனைசெய்த பொலிசார் அங்கிருந்து மேலும் 20 நகைகளைக் கைப்பற்றினர்.

இந்நபரால் திருடப்பட்டு முன்னர் வேலைசெய்த வீட்டில் உள்ள அரிசிச் சாக்கில் ஒளித்து வைக்கப்பட்ட பெருந்தொகையான நகைகளையும் பொலிஸார் மீட்டனர்.

முகமட் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

## இன்று

(அரியாலை)

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின்அங்குரார்ப்பண மகாநாடு இன்றுதொண்டமானாறு செல்வச்சந்நிதி மண்டபத்தில் தலைவர் திரு நாகங்கவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் சமாசத்தை அங்குரார்ப்பணப் செய்துவைப்பதுடன், சமாசத்தின் கொள்கைத்திட்டங்களும் யாப்பும் அங்கீகரிக்கப்படுவதுடன், சமாசத்தின் சேவைக்கான பேராளர் தெரிவும் நடைபெறும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு மாணவரை கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட குடும்ப சுகநலத்திட்டக் கருத்தரங்கு இன்று பிற்பகல் மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலையில் உதவி அரசாங் அதிபர் திரு க. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் திரு எஸ். கலாபரமேஸ்வரன், திருமதி யோகேந்திராதுரைசுவாமி, டாக்டர் கே சிவஞானரத்தினம், டாக்டர் ஆர். தெய்வேந்திரன் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர்.

## ஈரானில்7பேருக்கு மரணதண்டனை

தெஹ்ரான், ஏப். 14

ஈரானில் போதைவஸ்து குற்றச்சாட்டின் பேரில் ஏழு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது இவர்களில் ஒருவர்பெண்ணுவார்.

இவர்களில் ஆறுபேர்பகிரங்கமாகச்சுட்டுக் கொல்லப்பட்டனர் பெண்மாத்திரம் சிறைச்சாலையில்வைத்துக் கொல்லப்பட்டாள்.

ஈரானின் விசேஷ நீதிமன்றம் இவர்களுக்கானதண்டனையை விதித்திருந்தது. (வெ)

## கொள்வனவு

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேசத்தில் இம்முறை ஏற்பட்ட வறட்சி காரணமாக நெல்செய்கை 5 வீதம்கூட பலனளிக்காத காரணத்தால் எதிர்காலத்தில் நெல் தேவையைக் கருத்திற்கொண்டு துணுக்காய் பகுதிப. நோ. கூ. சங்கம் ஒருமூடை நெல்லை 200 ரூபா கொடுத்து கொள்வனவு செய்துவருகிறார்கள் இதன்பொருட்டுகூட்டுறவு பிரதிஆணையாளரின்பணிப்பின் பேரில், அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைமாவட்டப நோ. கூ. சங்கங்களுடன் தொடர்புகொண்டு நெல்லை கொள்வனவு செய்து வருகின்றனர். இதற்காக மக்கள் வங்கியால் வக்கிரடனும் வழங்கப்பட்டிருக்கிறது. (ஈ)

## தேர்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சி. கதிரவேலுப்பிள்ளை 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராகவே போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்டார். அவர் இறக்கும்வரை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினராகவே இருந்ததுடன் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாளர்களில் ஒருவராகவும் இறக்கும்வரை பணிபுரிந்துள்ளார் என்று திரு. அமிர்தலிங்கம் தமது பதிலில் தெரிவித்துள்ளார். (சி)

## மக்கள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மும் பட்சத்தில் விண்வெளி வீரர்களுக்கு உதவுவதற்கான பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.


## விற்பனைக்கு

'மனோகரா' தியேட்டர் சந்திக்கருகாமையில் 157, நாவலர் வீதியில் இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு: தொடர்பு:- 23, கடைச்சமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 8875



### யாழ்ப்பாணம்-மட்டுநகர்-யாழ்ப்பாணம் பயணிகளுக்கு "காங்கேசன் ரவல்ஸ்" அளிக்கும்

# புத்தாண்டுப் பரிசு!

## யாழ். - மட்டுநகர் பஸ் சேவை

இன்று புதன்கிழமை தொடக்கம் கீழ்க்காணும் நேரசூசியின்படி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன பஸ் வண்டிகளால் பயணிகளுக்கு சகல வசதிகளுடனும் செளகரியங்களுடனும் திறமையும் அனுபவமும் வாய்ந்த பஸ் குழுவினராலும் உத்தியோகத்தர்களாலும் மிகவும் திறமையான சேவை வழங்கப்படும்.

| புறப்படும் நேரங்கள் | | சென்று அடையும் நேரங்கள் |
| --- | --- | --- |
| காங்கேசன்துறை மாலை 5-00<br>யாழ்ப்பாணம் ,, 6-00 | → | மட்டக்களப்பு அதிகாலை 4-00 |
| மட்டக்களப்பு இரவு 7-00 | → | யாழ்ப்பாணம் காலை 5-00<br>காங்கேசன்துறை ,, 6-00 |

உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே கீழ்க்கண்ட இடங்களில் பதிவு செய்யலாம்.

1. வேலவன்ஸ் (பஸ் நிலையம் முன்பாக) இலக்கம்: 210, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். - தொலைபேசி இல: 7387
2. காங்கேசன் ரவல்ஸ், பிரதான வீதி, காங்கேசன்துறை தொலைபேசி இல.: 34
3. குணம்ஸ் பான்ஸி, இல.: 175, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
4. ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு. தொலைபேசி இல.: 335
5. சாந்தி சினிமா, மட்டக்களப்பு, தொலைபேசி இல.: 2912

கட்டணம்:-

| | | | |
| --- | --- | --- | --- |
| காங்கேசன்துறை | — | மட்டுநகர் | 52 ரூபா |
| யாழ்ப்பாணம் | — | மட்டுநகர் | 50 ரூபா |

உங்கள் பொதிகளை பாதுகாப்பாகவும் செளகரியமாகவும் கொண்டு செல்வதற்கு விசேட வசதிகள் பஸ் வண்டியில் செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் பகல் சேவையும் ஆரம்பிக்கப்படும். பயணிகளுக்கு திறமையான சேவையை வழங்கும் குறிக்கோளுடனே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக வாடகைக்கும் பஸ் வண்டிகள் விடப்படும்.

பிரயாணிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ரூபா 50,000/-க்கு காப்புறுதி செய்யப்பட்ட சேவை.

# காங்கேசன் ரவல்ஸ்

122, பிரதான வீதி, காங்கேசன்துறை.



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் சித்திரைத் திங்கள் 7-ஆம் நாள் (19-04-81) ஞாயிற்றுக்கிழமை இரவு 6-00 மணிக்கும் 7-30 மணிக்குமிடையிலுள்ள சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரி

## ஆனந்தகெளரிக்கும்

சுன்னாகம் ந. ஆனந்தநடராசா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

## நவானந்தனுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறத் திருவருள் பாலித்திருக்கிறது. அவ்வமயம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

'மணி மனை' மல்லாகம், 06-4-81 (8872)

தங்கள் நல்வரவை நாடும் ச. அம்பிகைபாகனும் பாரியாரும்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] ஏப்ரல் 15 [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QD [illegible]/78 The [illegible] P. O. Box 9. Telegram "Eelanaadu" Phone: [illegible] : 8786